மக்கள் ஓசை

12 November 2020, Thursday

## வெள்ளப் பேரிடருக்கு வெ.200,000 நிதி உதவி

# மெட்ரிக்ஸ் கான்செப்ட் வழங்கியது




நாகேந்திரன் வேலாயுதம்

சிரம்பான், நவ.12-

கடந்த வாரம் சிரம்பான் மாநகரில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் மெட்ரிக்ஸ் கான்செப்ட் ஹோல்டிங்ஸ் பெர்ஹாட் நிறுவனம் நெகிரி செம்பிலான் மாநில அரசாங்கத்திடம் வெ.200,000 வழங்கியது.

இந்நிதிக்கான மாதிரி காசோலை வழங்கும் அதிகாரப்பூர்வ நிகழ்வு நேற்று பகல் 2.30 மணியளவில் இங்கு விஸ்மா நெகிரியில் மந்திரி அலுவலகத்தில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் மாநில மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அமினுடின் ஹருனிடம், அந்நிறுவன குழுமத்தின் நிர்வாக இயக்குநர் ஹோ கோங் சூன் நிதியை ஒப்படைத்தார். நிதியை பெற்றுக்கொண்ட மந்திரி பெசார் அந்நிறுவனத்தின் நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

சில தினங்களுக்கு முன் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வீட்டுக்கு தலா வெ.500 வீதம் மொத்தம் ஆயிரம் வீடுகளுக்கு வெ.500,000 வழங்கியது என அவர் குறிப்பிட்டார்.

இச்சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர் உதவிகளைப் பணமாகவும், பொருளாகவும் வழங்கிக் கொண்டிருக்கும் தனியார் நிறுவனங்கள், சமூக அரசியல் அமைப்புகள், தனி நபர்களுக்கு மாநில அரசாங்கம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அமினுடின் செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.